# யாழ்ப்பாண முஸ்லீம்களின் வெளியேற்றத்தின் 15வது ஆண்டு நிறைவு.



இன்றைய யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி



இடிந்த வீடுகள்

15 வருடங்களுக்கு முன்பு (1990 ஒக்ரோபர் 30) சுமார் 30,000 முஸ்லீம் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாண நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அதற்கு ஒரு கிழமைக்கு முன்பு, சாவகச்சேரியிலிருந்தும் சுமார் 500 முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த மேலும் 150 முஸ்லிம்களுக்கும் அதே கதி ஏற்பட்டது. ஆயினும், நயினாதீவிலிருந்த முஸ்லிம்கள்-கடற்படையினரின் பாதுகாப்பினாலும், பெருந்தன்மை உடைய புத்த பிக்குவின் பிரசன்னத்தினாலும் இந்த வெளியேற்ற அவலத்தை சந்திக்கவில்லை.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளின் முஸ்லிம்களும் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். வட மாகாணத்திலிருந்து சுமார் 80,000-85,000 முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஒட்டுமடம் பொம்மைவெளி, சோனகத்தெரு போன்ற இடங்களில் பெருமளவில் வசித்தனர். அவர்கள் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்துள்ளனர்.

கல்வியில் மற்றத் தமிழர்களைப்போல் உயர்ந்த அளவு இல்லாவிடினும், அவர்களும் ஓரளவுக்கு படித்து வந்துள்ளனர். சகிரா கல்வி அதிபர் A.M.A.அஸீஸ், நீதிபதிகளான அப்துல் காதர், M.M.ஜமீல், கல்விப்பணிப்பாளர் மன்சூர் போன்றவர்கள் தமது துறைகளில் பிரகாசித்தவர்களாகும்.

மற்றத்தமிழர்களைப்போல், புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நடைபெற்ற மோதல்களினால் அவர்களும் பாதிக்கப்பட்டனர். அப்படிப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள், மண்கும்பானிலுள்ள பள்ளிவாசலில் சில கிழமைகள் தங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. 1990 ஆண்டு செப்ரெம்பர் 26ம் திகதி, யாழ்ப்பாணக்கோட்டையை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தமது வதிவிடங்களுக்குத் திரும்பி, வழமையான வாழ்க்கையைத் தொடங்கினர்.

இக்கால கட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கிடையில் பூசல்கள் அதிகரிக்கத் தொடங்கியது. சில முஸ்லிம் போராளிகள், புலிகள் அமைப்பிலிருந்து விலகினர். மற்றும் சிலர் எதிரணியுடன் இணைந்தனர். இவ் இளைஞர்களின் நடத்தை, கருணா (இராணுவப் பிரிவு), கரிகாலன் (அரசியல் பிரிவு) ஆகியோரின் தலைமையில் இயங்கும் கிழக்குப் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. சில முஸ்லிம் போராளிகள் புலிகளினால் கொல்லப்பட்டனர்.

அரச இயந்திரமும் இந்தப் பிளவை தமக்குச் சாதகமாக பயன்படுத்தி அதை மேலும் மோசமாக்கியது. சமூக விரோத முஸ்லிம்கள் ஊர்க்காவல் படையில் சேர்க்கப்பட்டனர். சில சமயங்களில் முஸ்லிம் படையினரால் தமிழ்க்கிராமங்கள் அழிக்கப்பட்டன. தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஊர்க்காவல் படையினருக்கு அரச பாதுகாவல் படையினர்



அழிந்த நிலையில் குடியிருப்புகள்

மறைமுக ஆதரவை வழங்கினர். அதற்குப் பதிலடியாக சம்மாந்துறை, ஏறாவூர், காத்தான்குடி போன்ற இடங்களில் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே முறுகல் நிலை இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் சமாதானமாக இருப்பது கிழக்குப்புலிகளுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. கிழக்கு மாகாணத்திலிருந்து கரிகாலன் தலைமையில் வடக்குக்கு வந்த ஓர் குழு, முஸ்லிம்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பிரபாகரனை தூண்டியது. கரிகாலன், முஸ்லிம்களுக்கு ஓர் பாடம் புகட்ட வேண்டும் என விரும்பியதாக கூறப்படுகிறது.

சாவகச்சேரியிலுள்ள முஸ்லிம்களில் பெரும் பகுதியினர் டச் வீதியில் வசித்து வந்தனர். சில முஸ்லிம்களிடையே உள்ள தகராறை விசாரணை செய்த புலிகள் சில வாள்களை கண்டுபிடித்தனர். தொடர்ந்து முஸ்லிம்களின் வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் சோதித்த புலிகள், ஓர் முஸ்லிம் இனத்தவரின் கடையிலிருந்து சுமார் 75 வாள்களை கைப்பற்றினர்.

புலிகள் இவ்வாறு வாள்கள் ஒளிக்கப்பட்டு வைத்திருந்ததை ஓர் பாரிய சதியாக கருதினர். அதில் உண்மை இருந்தாலும் புலிகளின் AK47 துப்பாகிகளுக்கு இந்த வாள்களால் ஒருவித பிரயோசனம் இல்லை. அநேகமாக வாள்கள், முஸ்லிம் சமூகத்தினரிடையே உள்ள உட்பூசலினால், சொந்தப் பாதுகாப்புக்கே வைத்திருக்கப்பட்டது.

அவ்வாள்கள் கண்டுபிடிக்கப்பட்ட வர்த்தக நிலையம் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமானது. அவரின் லொறிகள் அடிக்கடி கொழும்புக்குச் சென்றுவந்தன. புலிகளின் உளவுப்பிரிவினர் காரணமற்ற பயத்துக்குப் பேர் போனவர்கள். முஸ்லிம் வியாபாரிகள் அரச உளவுப்பிரிவினரால், தகவல் பெறுவதற்கும் நாசவேலைக்கும் உடந்தையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது. சாவகச்சேரியில் தொடங்கிய முஸ்லிம்களின் விரட்டல் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது. புலிகள் பின் கொடுத்த விளக்கத்தின்படி, கிழக்கு மாகாணத்திலிருந்து கரிகாலன் தலைமையில் வந்த பிரிவினரே முஸ்லிம்களை விரட்டுவரற்கு முக்கிய காரணமாக இருந்தது.

இப்படி முஸ்லிம்கள் வட பகுதியிலிருந்து விரட்டப்பட்டபோதும், யாழ்ப்பாண நகர் முஸ்லிம்கள் அதைப்பற்றி பெரிதும் கவனத்தில் எடுக்கவில்லை. தாம் யாழ்ப்பாணத்தின் ஒரு அங்கம் என நினைத்ததே காரணமாகும்.

1990ம் ஆண்டு ஒக்ரோபர் 30ம் திகதி ஒலி பெருக்கிகள் பூட்டப்பட்ட வாகனங்களில் முஸ்லிம் பகுதிகளுக்குச் சென்ற புலிகள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்து சிலரை ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் சமூகமளிக்குமாறு ஓர் கடுமையான அறிவிப்பை விடுத்தனர். அதே சமயம் ஆயுதம் தாங்கிய புலிகள் முஸ்லிம் பகுதிகளில் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மதியம் 12.30 அளவில், அங்கு வந்த மூத்த புலிகளின் தலைவரான ஆஞ்சநேயர் ஓர் சிறு அறிவிப்பை வெளியிட்டார். அதாவது இரு மணித்தியாலங்களில் பாதுகாப்புக்காரணங்களுக்காக முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்பதாகும். ஆஞ்சநேயர் இப்போது இளம்பரிதி என அழைக்கப்படுகிறார். மக்கள் கேள்விகள் கேட்டபோது அவர் தனது அமைதியை இழந்து, தனது கட்டளையை நிறைவேற்றுமாறு சத்தமிட்டார். அத்துடன் தமது துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களையும் தீர்த்தார். அவரின் பாதுகாவலர்களில் சிலரும் அவ்வாறே செய்தனர்.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள் தமது உடமைகளை தம்முடன் எடுத்துச்செல்லலாம் என கூறப்பட்டது. அவர்கள் தமது துணிமணிகள், நகைகள், காசு போன்றவற்றை பொதிகளாக கட்டி வெளியேற ஆயத்தமாகினர். அவர்களின் போக்குவரத்துக்கு புலிகளால் பஸ், லொறி, வான் போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டன. சில முஸ்லிம்கள் தமது வாகன வசதிகளை ஒழுங்கு செய்தனர்.

இப்போது முஸ்லிம்களுக்கு புதிய உத்தரவு விடுக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் ஐந்து முச்சந்தி என்ற இடத்துக்கு வருமாறு கூறப்பட்டனர். அங்கு அவர்களுக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. முஸ்லிம் மக்களின் பொதிகள் அனைத்தையும் புலிகள் பறிமுதல் செய்தனர். ஒவ்வொருவருக்கும் 150ரூபாவும் இன்னுமோர் சோடி உடுதுணியும் கொடுக்கப்பட்டது. மக்கள் ஆட்சேபித்தபோது அவர்கள் துப்பாக்கிமுனையில் விரட்டப்பட்டனர். காசு, அடையாள அட்டைகள் மற்றும் பல ஆவணங்கள் எல்லாமே பறிமுதல் செய்யப்பட்டன.

35 வியாபாரிகள் கடத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து பெருந்தொகையான பணம் அறவிடப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டனர். கடத்தப்பட்டவர்களில் 13பேரையுப் பற்றிய தகவல்கள் இன்றுவரை தெரியவில்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் முதலில் புத்தளம் சென்றனர். காலம் செல்ல அவர்களில் பலர் கண்டி, மாத்தளை, வவுனியா போன்ற இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். பிரேமதாச ஆட்சியில் அவர்களுக்கு சரியான குடியேற்ற வசதிகள் செய்யப்படவில்லை. இன்னும் சிலர் அகதி முகாம்களில் பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். காலஞ்சென்ற அஷ்ரப் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது இவர்களின் வாழ்க்கைதரம் மிகவும் உயர்ந்தது.

புலிகளால் கொள்ளை அடிக்கப்பட்ட முஸ்லிம்களின் உடமைகள் மக்கள் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விற்கப்பட்டன. அவர்கள் வெளியேற்றத்தால் புலிகளுக்கு அவதூறு ஏற்பட்டது. அன்ரன் பாலசிங்கம் ஓர் பாரிய தவறு என பின் ஏற்றுக்கொண்டார். புலிகளின் தலைவரும் முஸ்லிம்களின் வெளியேற்றத்தைப் பற்றி வருந்துவதாகவும் கூறினார். ஆனால் பிரபாகரன் இன்றுவரை மௌனம் சாதிக்கின்றார்.

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின் பல முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்த்து அதிர்ச்சி



தகர்ந்த இல்லங்கள்

அடைந்தனர். தற்போது யாழ்ப்பாணத்தில் சுமார் 1500 முஸ்லிம்கள் வசிக்கின்றனர். அத்துடன் தற்காலிகமாகவும் சுமார் 500 பேர் உள்ளனர்.

ஒஸ்மானியாக் கல்லூரி செயற்பட ஆரம்பித்துள்ளது. அங்கு 60 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். இரு பள்ளிவாசல்களும் சமய அனுட்டானங்களுக்காகத் திறக்கப்பட்டுமுள்ளன. முஸ்லிம்களின் 10 விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

இளம்பருதி முஸ்லிம் வியாபாரிகளைச் சந்தித்து ஓர் குறிப்பிட்ட வியாபாரத்தைச் செய்யுமாறு கூறினார். அவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறது. புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க அவர்களுக்கு ஒருவித வரிச்சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இளம்பருதி முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை. வெளியேற்றப்பட்டதற்கான காரணத்தையும் கூறவில்லை.

மூலக்கட்டுரை: டி.பி.எஸ்.ஜெயராஜ்

இதனால் பல முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் ஓர் பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக உணர்கின்றனர். மீண்டும் ஒரு யுத்தம் வராது எனக் கூற முடியாது. விடுதலைப் புலிகளும் திருந்தியதற்கான அறிகுறிகளும் இல்லை.

அத்துடன் வேறு இடங்களில் வாழும் யாழ் முஸ்லிம்களில் பலர் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இளைய தலைமுறையினரும், தாங்கள் தற்போது இருக்கும் இடங்களிலேயே வாழ விரும்புகின்றனர். இதனால் பல முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் சென்று தமது சொத்துக்களை விற்கின்றனர்.

அன்று குட்டையில் மீன் பிடித்தோம். இன்று சமுத்திரத்தில் மீன் பிடிக்கிறோம் என ஓர் முஸ்லிம் கூறினார். இருந்தும் வேறு இடங்களில் இன்னலுறும் முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் சென்று வாழவே விரும்புகின்றனர். ஆயினும் நிலமை சாதகமாக இல்லை. தான் சந்தித்த சில முஸ்லிம்கள், தமிழ் மக்கள் மீது வெறுப்போ அல்லது குரோதம் இல்லாமல் பெருந்தன்மையுடன் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளே தமது இக்கட்டான நிலைக்குக் காரணம் அவர்கள் உணர்ந்துள்ளனர். தமிழ் மக்களின் அவலங்களால் அவர்கள் தமிழ் மக்கள் மீது அனுதாபமாக உள்ளனர். அத்துடன் அவர்களை 15வருடங்களுக்கு முன்பு வெளியேற்றியதாக புலிகளும் முஸ்லிம்களுக்கு மனப்பூர்வமான மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும்.